**முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 7.12.2024**

**O.S. 266/2014**

**வா.சா.1–சதாசிவன்**

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் குடும்பத்தில் உள்ள அனைத்து விவரங்களையும் என் தாயார் சொன்னதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆம். 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் பூதலிங்க பணிக்கர் என்றால் சரிதான். 85 ஆண்டுகளுக்கு முன்பே அவர் நாகர்கோவில் அலெக்சான்டர் பிரஸ் ரோட்டில் பெரிய மளிகை கடை நடத்தி வந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் திருமண சமயத்தில் அவர் வீட்டார் 150 பவுன் நகை விளைநிலங்கள் தோப்புகள் வணிக வளாக கடைகள் சிதம்பர வீதியில் குடியிருக்க வீடு ஆகிய சீர்வரிசை கொடுத்தார்கள் என்றால் வீடு மட்டும் கொடுத்தது தெரியும்.

1ம் பிரதிவாதியின் கணவர் சதாசிவன் அவர் மனைவியின் சொத்து வருமானங்களை கொண்டுதான் தொழில் செய்து வந்தார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து 1ம் பிரதிவாதியின் பெயரில் வாங்கப்பட்டது எப்போது வாங்கப்பட்டது என்று தெரியாது. 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை அவர் சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தை வைத்தும் அவர் நடத்திய பால்பண்ணை வருமானத்தை வைத்தும் வாங்கினார் என்றால் சரியல்ல அவர் பால்பண்ணை நடத்தவில்லை. வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள கட்டிடம் 1964 ம் ஆண்டு 1ம் பிரதிவாதி பெயரில் அனுமதி வாங்கி கட்டப்பட்டது என்றால் சரிதான். அந்த கட்டிடத்தில் 1ம் வாதி 4,5 பிரதிவாதிகள் அவர்கள் பெற்றோர்களுடன் தாமசித்து வந்தார்கள் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் ஒரு பகுதி 4 சென்ட் இடத்தில் வசந்தா வணிக வளாகம் 1ம் பிரதிவாதி பெயரில் கட்டிட அனுமதி வாங்கி 1ம் பிரதிவாதி கட்டினார் என்றால் கட்டிடத்தை என் தாத்தா கட்டினார்.

அந்த வணிக கட்டிடத்தை என் தாத்தா சதாசிவம் கட்டியதாக காண்பிக்க என்னிடம் ஏதாவது ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு பட்டிகை சொத்து குறித்து 5ம் பிரதிவாதியின் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான் அந்த வணிக வளாகத்திற்கு முன்பு ஒரு வீடு இருந்தது அங்கு அனைவரும் தாமசித்து வந்தனர் அங்கு வைத்து 5ம் பிரதிவாதியின் திருமணம் நடைபெற்றது. 5ம் பிரதிவாதி 10 ம் வகுப்பு வரை படித்துள்ளார் என்றால் சரிதான். 5ம்பிரதிவாதிக்கு 1970 ம் ஆண்டு என் பாட்டி 1ம் பிரதிவாதி திருமணம் செய்து வைத்தார் என்றால் என் பாட்டி மற்றும் தாத்தா சேர்ந்து திருமணம் செய்து வைத்தார்கள்.

5ம் பிரதிவாதி திருமணத்தின்போது அவர் பெற்றோர் 125 பவுன் நகை சீர்வரிசையாக கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. 5ம் பிரதிவாதியின் கணவர் ராஜாராம் கர்நாடகா மாநிலம் அரசுதுறையில் பணி செய்து வந்தார் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதியின் மகள் கார்த்திகா இந்து கல்லூரியில் உதவி பேராசிரியராக பணி புரிகிறார். 5ம் பிரதிவாதியின் மகன் சுரேஷ்குமார் force automobile company தொழில் செய்கிறார் என்றால் சரிதான். என் பாட்டி மற்றும் தாத்தா 5ம் பிரதிவாதி கணவர் பெயரில் மைசூரில் இடம் வாங்கி வீடு கட்டி கொடுத்தார் என்றால் சரியல்ல.

நாகர்கோவில் இந்து கல்லூரி சமீபம் ஜீவாநகர் நாகர்கோவில் கிராமம் புலஎண்.1894 ல் 39.83 சென்ட் மனையை 28.6.1971 அன்று பத்திர எண்.2481 ஆக என்னுடைய பாட்டி என் தாயார் மற்றும் 5ம் பிரதிவாதிக்கு விலைக்கு வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. என் பாட்டியின் அப்பா பூதலிங்க பணிக்கர் வாங்கி கொடுத்தார். அந்த சமயத்தில் என் தாயார் இளவர் என்பதால் பூதலிங்க பணிக்கர் காப்பாளராக இருந்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் என் பெயரில் டிவிடி நகரில் 5 வது தெருவில் 7 1/2 சென்ட் மனையை என் பாட்டி

வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல தாத்தா தான் வாங்கி கொடுத்தார்.

5 வது பிரதிவாதியின் கணவர் பெயரில் திருநெல்வேலி புதிய பேருந்து நிலையம் அருகே ராஜராஜேஸ்வரி நகரில் 5 ½ சென்ட் மனையை என் பாட்டி வாங்கி கொடுத்தார் என்றால் என் தாத்தா தான் வாங்கி கொடுத்தார். ஈத்தாமொழி அருகே 55 சென்ட் தோப்பு மனையை 1ம்பிரதிவாதி 5 ம் பிரதிவாதிக்கு வாங்கி கொடுத்தார் என்றால் என் தாத்தா தான் வாங்கி கொடுத்தார். என் அம்மா பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளார் என்றால் சரிதான். என் தாயாருக்கு 1974 ம் ஆண்டு திருமண சமயத்தில் 150 பவுன் தங்க நகைகள் ரொக்கபணம் மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் சீதனமாக கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா ஆரல்வாய்மொழி அறிஞர் அண்ணா கல்லூரியில் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றார் என்றால் ஆம். நான் மற்றும் என் தம்பி ராஜாராம் ஆகிய இருவரும் நாகர்கோவில் , மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் மகேந்திரா, எமகாஜாவா, இருசக்கர வாகனத்தின் மொத்த விற்பனையாளராக செயல்பட்டு வருகிறோம் என்றால் ஆம். அந்த தொழிலுக்கு மொத்த முதலீடு 20 லட்சம் ஆகும்.

அந்த தொகையை என் தாத்தா தான் கொடுத்தார் என்றால் சரியல்ல. என் அப்பா மற்றும் நாங்கள் வேலை பார்த்த வருமானத்தை கொண்டு முதலீடு செய்தோம். என் சகோதரி சண்முகபிரியா திருமண சீர்வரிசை அனைத்தும் என் தாத்தா பாட்டிதான் செய்தார்கள் என்றால் சரியல்ல. முனனர் சொன்ன ஜீவாநகர் சொத்தில் என் தாயாருக்கும் 5 ம் பிரதிவாதிக்கும் சமபங்கு என்றால் சரிதான். அந்த சொத்தில் என் அம்மா மற்றும் 5 ம் பிரதிவாதி தனித்தனியே வீடு கட்ட என் தாத்தா பாட்டி லட்ச கணக்கில் தொகை செலவு செய்தார்கள் என்றால் சரியல்ல.

என் அம்மாவிற்கு 1 ¼ ஏக்கர் நிலம் மற்றும் 5 ம் பிரதிவாதிக்கு 1 ஏக்கர் நிலமும் 5 வீடும்

என் தாத்தா பாட்டி வாங்கி கொடுத்தார்கள் என்றால் சரிதான். வெள்ளமடத்தில் உள்ள 18 சென்ட் மனையை என் தாத்தா பாட்டி என் தாயாருக்கு இஷ்டதானமாக கொடுத்தார் என்றால் சரிதான். முப்பந்தல் கோவில் பின்புறம் 5 ஏக்கர் நிலம் என் தாத்தா என் அம்மாவிற்கு வாங்கி கொடுத்தார் என்றால் சரிதான் அதனை என் தாத்தாவே பராமரித்து வந்தார் அவர் உயிருடன் இருந்த காலத்தில் அவரே அதை விற்று விட்டார். வடிவீஸ்வரகிராமம் புதுபுலஎண்.பி.21/134 மற்றும் 129 ல் 2.1/3 மனையும் அதில் அடங்கிய கட்டிடம் எண்.40/488, 488 A,B,C,D,E சொத்து என் தாத்தாவிற்கு சொந்தமாக இருந்தது என்றால் சரிதான். அந்த சொத்து குறித்து 28.4.2011 அன்று இடலாகுடி சார்பதிவாளர் அலுவலக ஆவண.எண்30/2011 உயில் ஆவணத்தை என்தாயார் பெயரில் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான் அந்த உயில் ஆதாரம் என் கைவசம் உள்ளது. அந்த உயிலில் அந்த ஆவணம் என் தாத்தா பாட்டி காலத்திற்கு பின் அமலில் வரும் என்று அந்த சொத்து என் தாத்தா காலத்திற்கு பின் என் பாட்டி அனுவத்தில் வரும் என்றும்அதன்பின் தான் என் தாயார் அனுபவத்திற்கு வரும் என்றும் சொல்லப்பட்டுள்ளதென்றால் சரிதான். என் தாத்தா இருக்கும் சமயத்தில் அந்த கட்டிடத்தை வாடகைக்கு விட்டிருந்தார் என்றால் சரிதான்.

என் தாத்தா கடந்த 4.12.2013 அன்று இறந்தார் என்றால் சரிதான் என் தாத்தா இறந்த பின் என் பாட்டி அந்த கட்டிட வாடகையை வாங்க விடாமல் என் தாயார் தடை செய்தார் என்றால் சரியல்ல என் பாட்டிதான் வாடகை வாங்கி வந்தார். என் தாயார் என் பாட்டியை வாடகை வாங்க விடாமல் தடைசெய்து என் பாட்டியை கஷ்டபடுத்தினார் என்றால் சரியல்ல. என் பாட்டி 28.9.2015 அன்று வருவாய் கோட்டாட்சியரிடம் அவருக்கான வருமானம் தடைசெய்யப்படுவதாக பெற்றோர் மற்றும் முதியோர் பாதுகாப்பு வாரியத்தில் மனு

கொடுத்தார் என்றால் ஆம். என் பாட்டி உயிரோடிருந்த காலத்தில் என் தாயார் முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.163/2017 வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

அந்த வழக்கில் 20.7.2017 ல் என் பாட்டி என் தாயாரின் பிராதிற்கு வழக்கு சங்கதிகளை மறுத்து பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு என் தாயார் தாக்கல் செய்ததால் பெற்றோர் மற்றும் முதியோர் பாதுகாப்பு வாரியம் வழக்கை சிவில் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதாக சொல்லி முடித்தது என்றால் சரியல்ல என் பாட்டிக்கு போதிய வருமானம் இருப்பதாக நாங்கள் தெரிவித்த விவரத்தை ஏற்று வழக்கை முடித்தது. என் பாட்டிக்கு போதிய வருமானம் இருப்பதாக காட்ட என்ன ஆவணங்கள் தாக்கல் செய்தோம் என்றால் வாடகை அவர் பெற்றதற்கான ரசீது நகல்கள் வருவாய் கோட்டாட்சியரிடம் தாக்கல் செய்தோம் அவை எங்களிடம் உள்ளது. அந்த ரசீது நகல்களை இந்நீதிமன்றத்தில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் இந்த வழக்கிற்கு தேவை இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை.

அ.வ.எண்.163/2017 நிலுவையில் இருந்த சமயம் 1.2.2018 அன்று என் பாட்டி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அ.வ.எண்.163/2017 26.2.2019 அன்று தான் என் பாட்டி இறந்து ஒருவருட காலம் கழித்து அந்த வழக்கு நடத்த தேவை இல்லை என என் தாயார் எழுதி அந்த வழக்கு தள்ளுபடி ஆனது என்றால் ஆம். கட்டிடம் எண்.40/488, 488 A,B,C,D,E கடைகளுக்கு மொத்த மாத வாடகை ரூ.20000/- வரும். நான் சொல்வது சரியல்ல என்றாலும் மொத்த மாத வாடகை ரூ.30000 /- என்றாலும் சரியல்ல. என் தாத்தா இறந்த 4.12.2013 முதல் என் பாட்டி இறந்த 1.2.2018 வரை 1520 நாட்கள் என்றால் சரிதான். அந்த காலத்திற்கான வாடகையை என் பாட்டிக்கு கொடுத்ததாக எங்களிடம் என்ன ஆவணம் உள்ளது

என்றால்அந்த புத்தகத்தில் என் பாட்டி கையொப்பம் போட்டு வாங்கியது தான் ஆதாரம் குறிப்பிட்ட காலத்திற்கு பின் என் பாட்டி அவருக்கு போதுமான வருமானம் உள்ளது என்றும் என் தாயாரையே வாடகையை வாங்க சொல்லி கொடுத்துவிட்டார்.

நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என் தாத்தா இறந்து ஒருவருட காலம் என் பாட்டி வாடகை வாங்கி இருந்தார் அதன்பின் என் அம்மாவை வாடகை வாங்க சொல்லிவிட்டார். என் பாட்டி சொன்னபடி அவர் இறக்கும் காலம் வரையில் உள்ள பாக்கி 4 வருட வாடகையை என் தாயார் வாங்கினார் என்றால் ஆம் அந்த தொகை உத்தேசமாக 9 லட்சத்தி 60 ஆயிரம் இருக்கும். அந்த தொகையை என் பாட்டி அவசிய தேவைக்கானது என்றாலும் அதனை என் தாயார் அபகரித்துள்ளார் என்றாலும் சரியல்ல.

அ.வ.எண்.163/2017 ல் என் தாயார் பிராது பத்தி 4 ல் என் தாத்தா இறந்த பின் என் பாட்டி சொத்தை அனுபவிக்க விடாமல் என் தாயார் அனுபவித்து வருவதாக சொல்லி இருந்தார் என்றால் என் பாட்டியின் life estate க்கு உட்பட்டு அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் இருப்பதாக சொல்லி உள்ளார். என் தாத்தா உயில் படி என் தாயார் நடந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அந்த வாடகை தொகையாக நான் சொல்லும் ரூ.9 லட்சத்தி 60 ஆயிரம் அவரின் மூன்று பிள்ளைகளுக்கும் சமமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அந்த தொகையின் மூன்றில் ஒருபாகம் 4 ம் பிரதிவாதிக்கு சட்டபடி உண்டு என்றால் சரியல்ல. என் அம்மா நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தார் அதனை ஒப்பு கொள்வார் என்றும் அதனால் அவரை சாட்சியம் அளிக்க விடாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4 ம் பிரதிவாதி இன்று நீதிமன்றம் வந்துள்ளார். 4 ம் பிரதிவாதியின் பிள்ளைகள் தான்

2,3 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி 1960 ம் ஆண்டு பிறந்தார் என்றால் சரிதான். 4ம்பிரதிவாதி 1981 ம் ஆண்டு எம் ஏ பட்டபடிப்பு முடித்தார் என்றால் எனக்கு தெரியாது. பட்டபடிப்பை முடித்தபின் என் தாத்தாவுடன் சேர்ந்து 4ம் பிரதிவாதி எண்ணெய் கடை தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். அந்த கடையில் 4ம் பிரதிவாதி மாத சம்பளத்திற்கு வேலை பார்த்தார் என்றால் சரியல்ல. என் தாயார் மற்றும் 5ம் பிரதிவாதிக்கு என் தாத்தா நிறைய சொத்துக்களை கொடுத்த பின்தான் வைத்தியநாதபுரத்தில் 55 சென்ட் மனை மற்றும் வீட்டை என் தாத்தா கொடுத்தார் என்றால் அதே காலகட்டத்தில் அந்த சொத்து மற்றும் எ.அர் கேம்ப் ரோட்டில் 60 சென்ட் நிலமும் என் தாத்தா 4ம் பிரதிவாதிக்கு கொடுத்தார். அந்த 60 சென்ட் நிலம் என் தாத்தா 4ம் பிரதிவாதிக்கு வாங்கி கொடுக்கவில்லை என்றாலும் 4ம் பிரதிவாதி அந்த சொத்தை அவர் உழைப்பில் விலைக்கு வாங்கினார் என்றால் சரியல்ல.

4ம் பிரதிவாதிக்கு 2005 ம் ஆண்டு என் தாத்தா நடத்தி வந்த எண்ணெய்கடையை கொடுத்தார் என்றால் என் தாத்தா கடையை 4ம் பிரதிவாதிக்கு கொடுத்துவிட்டு ஒதுங்கிவிட்டார் ஆண்டு எனக்கு தெரியாது அந்த கடை இருக்கும் இடம் முதலியார் டிரஸ்டுக்கு உரியது என்றால் சரிதான். என் பாட்டி 4ம் பிரதிவாதிக்கு கோட்டாரில் ¾ சென்ட் மனை மற்றும் அதிலுள்ள கட்டிடத்தை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதிக்கு என் பாட்டி நாராயணகுரு பள்ளிகூட சமீபத்தில் ஒரு 10 சென்ட் மனை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் தாத்தா பாட்டி என் தாயாருக்கும் 5ம் பிரதிவாதிக்கும் பலகோடி மதிப்புள்ள சொத்துக்களை கொடுத்துள்ளார் என்றாலும் 4ம் பிரதிவாதிக்கு சொற்ப மதிப்பான சொத்துக்களை தான் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

(2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை

ஒத்தி வைக்கப்படுகிறது.)